செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 428 நாள்: 19/7/17

ந.க.எச்2.7814/2017

மாவட்டஆட்சியர் அலுவலர்,
வேலூர்-9.

நாள்: 18.7.2017

## பத்திரிக்கைச் செய்தி

வாக்காளர் பட்டியலில் முதல் முறைவாக்காளரிடையே (18 - 21 வயதுடையோர்) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பது தொடர்பாக போதிய விழிப்புணர்வு இல்லாததால் இவர்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பாக ஜூலை 1-ந் தேதிமுதல் 31-ந் தேதி வரை இந்தியதேர்தல் ஆணையம் சிறப்பு முகாம் நடத்திட உத்தரவிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வேலூர் மாவட்டத்தில் உள்ள முதல் மற்றும் இளம் தலைமுறை வாக்காளரிடையே (18 - 21 வயதுடையோர்) போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இச்சிறப்பு முகாம் சிறப்பாக நடத்திட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைய உத்தரவின்படி ஜூலை மாதம் 1 முதல் 31-ந் தேதி வரை அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள் மற்றும் வருவாய் கோட்டஅலுவலகங்களில் 18 முதல் 21 வயதுடையோர் பெயர் சேர்ப்பதற்காக படிவங்கள் பெறும் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேலும் ஜூலை மாதம் 9-ந் தேதி மற்றும் 23-ந் தேதி ஆகிய இருஞாயிற்றுக் கிழமை அரசு விடுமுறை நாட்களிலும் வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 1627 வாக்குச்சாவடி அமைவிடங்கள், 13 வட்டாட்சியர் அலுவலகங்கள், 12 நகராட்சி அலுவலகங்கள், 3 கோட்டாட்சியர் அலுவலகங்கள் ஆக மொத்தம் 1655 மையங்களில் சிறப்பு முகாம் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதில் ஜூலை மாதம் 9-ந் தேதி முதலாவது சிறப்பு முகாம் நடைபெற்றது.

இரண்டாவது முகாம் இம் மாதம் வரும் 23 ம் தேதி மேற்படி முதல் முகாம் நடந்த அதே இடங்களான, வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 1627 வாக்குச்சாவடி அமைவிடங்கள், 13 வட்டாட்சியர் அலுவலகங்கள், 12 நகராட்சி அலுவலகங்கள், 3 கோட்டாட்சியர் அலுவலகங்கள் ஆக மொத்தம் 1655 மையங்களில் சிறப்பு முகாம் நடத்தி காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை 18 முதல் 21 வயதுடையோர் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான முகாம் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வயதுடைய வாக்காளர் அனைவரும் இவ்வறிய வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுமட்டுமல்லாமல் வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 18 வயதிற்குமேல் வயதுடையோர் மாணாக்கர்களாக உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களிலும் (சுமார் 102) வளாக தூதுவராக (Campus Ambassador) மாணவர் ஒருவரையும், வளாக ஒருங்கிணைப்பாளராக அலுவலர் ஒருவரையும் நியமனம் செய்து அந்தந்த கல்லூரி வளாகத்தில் பயிலும் மாணாக்கர்களிடையே வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பது தொடர்பாக போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக்கல்வி நிறுவனம் அமைந்துள்ள வட்டாட்சியர் அலுவலகம் மூலமாக ஒரு வருவாய்த்துறை அலுவலரை நியமனம் செய்துவாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 3439 வாக்காளர் பட்டியல் களப்பணியாளர்கள்(BLO) வீடுவீடாக 18-21 வயதுடையோர் கணக்கெடுப்பு மேற்கொண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டிருப்பின் பெயர் சேர்த்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியினைகண்காணிக்க 224 மேற்பார்வை அலுவலர்கள் (முதுநிலைவருவாய் ஆய்வாளர்கள்) இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பணி சிறப்பானவகையில் நடப்பதை உறுதிசெய்திடும் வகையில் ஒரு சட்டமன்றத்தொகுதிக்கு ஒரு துணைஆட்சியர் நிலையிலான அலுவலர் சிறப்பு அலுவலராகநியமனம் செய்து பணியினை கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மின்னணுமுறையில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்துக் கொள்ள**"www.elections.tn.gov.in"**என்றஇணையதளமுகவரியில் **on line** மூலமாக பெயர் சேர்த்துக் கொள்ளவும் தேர்தல் ஆணையம் ஏற்பாடுசெய்துள்ளது. **ஏற்கனவேபெயர் சேர்க்கப்பட்டுவாக்காளர் அடையாள அட்டைஇல்லாதவர்கள் மீளபடிவம் 6 வழங்கதேவையில்லை. அவர்களதுவாக்காளர் அடையாள அட்டை எண்ணை வட்டாட்சியர் அலுவலகங்களில் இயங்கும் இ-சேவை மையங்களில் வழங்கி வாக்காளர் அடையாளஅட்டையை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறார்கள்.**

அங்கீகரிக்கப்பட்டஅரசியல் கட்சியினர் சார்பாக இப்பணியில் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், வாக்காளர் பட்டியல் களப்பணியாளர்களுக்கு (BLO) உறுதுணையாக செயல்பட ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் ஒருமுகவர் (Booth Level Agent)நியமனம் செய்துகொள்ளவும் தேர்தல் ஆணையத்தால் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் இச்சிறப்பு முகாமின்போதுஇறந்த / இருமுறைபதிவு கொண்ட / முகவரியில் வசிக்காத வாக்காளர் பெயர் நீக்கம் செய்திட படிவம் 7 வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி வேலூர் மாவட்டத்தில் 18 முதல் 21 வயதுடைய தகுதியுடைய வாக்காளர் எவரும் விடுபடவில்லை என்ற நிலையை எய்திட ஏதுவாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்துக்கொள்ள விண்ணப்பம் செய்து பயன்பெறுமாறு அனைத்து பொதுமக்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என வேலூர் மாவட்டஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., கேட்டுக் கொண்டுள்ளார்.

18/7/17

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
வேலூர்-9.

19/7/17

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை,

19/7/17